## விவேகானந்தா ஆசிரம இடத்தை வர்த்தகப் பகுதியாக மாற்றக்கூடாது

# பரிசீலனை செய்வீர்



## டிபிகேஎல்லுக்கு வலியுறுத்தல்

அதில் விவேகானந்தா ஆசிரமத்தைப் பாதுகாப்போம் எனும் குழுவினர் இதன் தொடர்பில் தங்களின் விளக்கத்தை தெரிவித் துள்ளதாகக் குறிப்பிட்ட னர். இந்த ஆசிரமப் பகுதியை கமர்ஷியல் எனப்படும் வணிகத்தளமாக உருமாற்றும் பரிந்துரைக்கு

பக்கம் 13

கோலாலம்பூர், ஜூன் 25-

124 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தா ஆசிரம இடத்தை வணிகப் பகுதியாக உருமாற்றும் பரிந்துரையை கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அப்பகுதி வாழ் மக்கள் வலியுறுத்தியுள்ளனர். நேற்று டிபிகேஎல் ஆடிட்டோரியத்தில் இவ்விவகாரம் தொடர்பில் பொது கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது.

### முதல் பக்கத் தொடர்ச்சி

### விவேகானந்தா ஆசிரம...

எதிர்ப்புத் தெரிவித்து எங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினோம்.

இந்த இடம் பொது வசதி பகுதி, அதாவது வெள்ளை மண்டலமாக தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பு என இந்த கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர் களை சந்தித்த இக்குழுவின் பிரதிநிதி தேவகுஞ்சரி சம்பந்தன் குறிப்பிட்டார்.

சுமார் 0.91 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இந்த இடத்தை முதன்மை வணிகப்பகுதியாக உருமாற்றக்கூடிய பரிந்துரை எங்களுக்குப் பதற்றமளிக்கின்றது. 2016ஆம் ஆண்டே இந்த பகுதி தேசியப் பாரம்பரிய இடம் என அரசாங்கப் பதிவேட்டில் இடம்பெற்றுள்ளது. ஆனாலும் வருங்காலத்தில் மேம்பாட்டுப்பணிகளுக்காக இந்தப் பகுதி எடுத்துக்கொள்ளப்படும் என்ற ஆரூடத்தையும் நாங்கள் மறுக்கவில்லை.

எனவே இந்த நிலத்தை பாரம்பரியப் பகுதியாக டிபிகேஎல் தரப்பு நீட்டிக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம். இங்கு சமயம், கலாச்சாரம், பாரம்பரிய நடவடிக்கைகள்தாம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எங்களின் எதிர்பார்ப்பு. அதேசமயம் இன்று எங்களுக்காக நேரம் ஒதுக்கி கருத்துக்கேட்ட குழுவினருக்கும் நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் எனவும் தேவகுஞ்சரி குறிப்பிட்டார்.

முன்னதாக இந்தக் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் புகைப்படம் எடுக்கவோ, காணொளி பதிவு செய்யவோ அனுமதி வழங்கப்படவில்லை. சுவாமி விவேகானந்தாவின் வெண்கலச் சிலை வீற்றிருக்கும் இந்த ஆசிரமம் பிரிக்பீல்ட்ஸில் புகழ் பெற்ற கட்டடங்களுள் ஒன்றாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக் கது.கடந்த 2014ஆம் ஆண்டு இந்த நிலத்தில் 0.4 ஹெக்டர் பகுதி மேம்பாட்டு நிறுவனத் திற்கு விற்க ஆசிரமத்தின் வாரியக்குழு ஒப்புதல் அளித்துள்ளதாக முன்பு கூறப்பட் டது. ஆனாலும் பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக அப்போதைய சுற்றுலா, கலாச்சாரத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் நஸ்ரி தலையிட்டு தேசியப் பாரம்பரிய இலாகா வாயிலாக அரசாங்கம் விவேகானந்தா ஆசிரமத்தைப் பாரம்பரியப் பகுதி என அரசாங்கப் பதிவேட்டில் இடம் பெறச் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.